சிவமயம்







காங்கேசன் துறை

அமரர்

# திருமதி மகேஸ்வரி நடராசா

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

12 - 08 - 1998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

வள்ளுவனார் வாசுகி
வாழ்ந்திட்ட பாதையிலே
வாழ்ந்து காட்டிய நீயும்
தெள்ளு தமிழில்
தேனிசை பாடியே
தேவாதி தேவன் திருவடியில்
கள்ளெனக் கலந்தாயுனக்கு
கமலமெனவே இம்மலரை
அள்ளிச் சொரிந்தே
ஆறுதலடைகின்றோம்!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# திருமதி மகேஸ்வரி நடராசா

மலர்வு - 27 - 02 - 1931 உதிர்வு:- 13 - 07 - 1998

## திதி வெண்பா

வெகுதானிய ஆண்டுசேர் ஆனியிருபத்தொன்பதிலே
ஏகுமதிதி சதுர்த்திசேர் சதயத்திலே - ஆகும்
சிவன் கழலே தஞ்சமெனச் சென்றாள் மகேஸ்வரி
அவன் நிழலை நாடி விரைந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அமரர் திருமதி மகேஸ்வரி நடராசா

அவர்களது

# வாழ்வுச்சீர்

இலங்கைத்தீவிலே இலங்கும் யாழ்ப்பாண மாவட்டத்திலே துலங்கும் துறைமுகமாம் காங்கேசன்துறையிலே சிறப்புற வாழ்ந்திருந்த நடராசா - பாக்கியம் தம்பதிகளுக்கு 1931 ஆம் ஆண்டு மாசித்திங்கள் பன்னிரண்டாம் நாள் (27.02.1931) அன்பு மகளாக அமரர் ந. மகேஸ்வரி அவர்கள் பிறந்தார். அன்புச் சகோதரர்களாக கமலேஸ்வரி, துரைராஜா, தங்கேஸ்வரி, கிருஷ்ணவேணி அற்புதமலர், ஆகியோர் விளங்கினர்.

அன்னையின் அணைப்பினை ஆண்டு இரண்டிலே இழந்தவர் அன்பு மாமிமாராகிய தில்லையம்மா, செல்லமுத்து, ஆகியோரின் ஆதரவில் வளர்ந்தார் கமலாம்பிகை, நவரத்தினம், வைத்தீஸ்வரன், ஆகிய மைந்துனர்களையும் அன்புச் சகோதரர்களாகக் கருதி பாசம் போற்றி வாழ்ந்தார்.

தனது ஆரம்பக்கல்வியை மயிலிட்டி கலைமகள் மகாவித்தியாலையத்திலும். இடைநிலைக் கல்வியை. காங்கேசன்துறை அமெரிக்கமிஷன் ஆங்கிலப்பாடசாலையிலும் பெற்றார்.

சிறுவயது முதலாக அறிவிலும் ஆற்றலிலும் சிறந்து விளங்கிய மகேஸ்வரி அவர்கள் மங்கைப் பருவத்தே மணநாளும் கைகூட மணாளனாக மாவிட்டபுரத்தைச் சேர்ந்த கந்தையா - நாகம்மா தம்பதிகளின் புதல்வராகிய நடராசா அவர்களை (எழுது விணைஞர் - கச்சேரி) ஏற்று இல்லறத்தில் இணைந்தார்.

1951 ஆண்டு நடராசா - மகேஸ்வரி தம்பதிகளாய் இணைந்த நாள் முதல்.

'இல்லது என் இல்லவள் மாண்பானால்...' என்ற பொதுமறையின் வரிகளுக்கேற்ப எல்லா நலன்களும் பொருந்த வாழ்ந்து இல்லறத்தை நல்லறமாக்கி சிறப்புக்கள் பல சேர்த்தார்.

இனிய இல்லறத்தின் பயனாக இவர்களுக்கு ஆறு பிள்ளைகளும் பிறந்தனர் ஆண்பாதி பெண்பாதி என சுதர்சன், கந்தவேள், நரேந்திரன், எனும் மூன்று ஆண்பிள்ளைகளையும் சஞ்சனா, அனுஜா,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெங்கா, என மூன்று பெண் பிள்ளைகளையும் பெற்றெடுத்து இனிது மகிழ்ந்திருந்தனர்.

தாம் பெற்றெடுத்த மக்களை கண்ணெனப் போற்றி வளர்த்து கல்வி அறிவுடையவராக்க அரும்பாடு பட்டார்.

மூத்த மகளான ரஞ்சனாவுக்கு (ஆசிரியை) காங்கேசன்துறையைச் சேர்ந்த சிறீதரன் (ஆராய்ச்சி உத்தியோகத்தர்) என்பவரை திருமணம் செய்வித்து மகிழ்ந்திருந்தார். அவர்கள் றஜீஸ், நிலானி, தவிதா, என அருமைச் செல்வங்கள் மூவரை பெற்றெடுத்து கனடாவில் களிப்புடன் வாழ்வதைக் கண்டிருந்தார்

மூத்த மகனான சுதர்சனுக்கு (களஞ்சியப் பொறுப்பாளர் - லங்கா சீமெந்து லிமிட்டெட்) அளவெட்டியைச் சேர்ந்த ஜெயமலர் எனும் மங்கையைத் திருமணம் செய்வித்து இனிதே வாழவைத்து மகிழ்ந்திருந்தார்,

அடுத்த மகனான கந்தவேளுக்கு (எழுது வினைஞர் யா/பல்கலைக்கழகம்) மன்னாரைச் சேர்ந்த ஜெயகுமாரி (ஆசிரியை) எனும் பெண்ணைத் திருமணம் செய்வித்து நலமே வாழ வைத்தார்

அடுத்த பெண் வாரிசான அனுஜா அன்னை தந்தை மீது கொண்ட அரிய பாசத்தால் அவர்களுக்கு உதவி புரிந்து வாழ்தலே பெரும் பேறெனக் கருதி வாழ்தல் கண்டு மகிழ்ந்திருந்தார்.

இளைய மகனான நரேந்திரன் (கோயிற் புதுக்குளம் இந்துக் கல்லூரி - வவுனியா) ஆசிரியராக அரும்பணி ஆற்றிக் கொண்டிருக்கிறார்.

இளைய மகளான கெங்கா எழுது வினைஞராக கோட்டக் கல்வி அலுவலகத்தில் (உடுவில்) பணிபுரிந்து வருகிறார்.

இவ்வாறு மக்கள் மருமக்கள் பேரர் என சந்ததியினர் சீரும் சிறப்பும் பொருந்த வாழ்தல் கண்டு உள்ளத்தே மகிழ்வு கொண்டவர் அமரர் திருமதி மகேஸ்வரி அவர்கள்.

அன்பு, பணிவு, ஆக்கம், ஊக்கம், அடக்கம், விடாமுயற்சி, இறை பக்தி. என நற்பண்புகள் பலகொண்டு உற்றவரும் மற்றவரும் போற்ற வாழ்ந்தார்.

இவ்வாறாக சீரும் சிறப்பும் மிக்க வாழ்வை - பொலிவும் புகழும் மிக்க வாழ்வை நிறைவு செய்து திருமதி மகேஸ்வரி அவர்கள் 1998 ஆம் ஆண்டு ஆனித்திங்கள் 29 ஆம் நாள் (13.07.1998) திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் சதய நட்சத்திரம் கூடிய சிறந்த நாளிலே நடராஜரின் பாதங்களில் சேர்ந்தார்.

குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள் புலம்பல்

கண்ணென எமைக் காத்தாய்
கனவிலும் எம் நலன் நினைத்தாய்
எண்ணிலா வினை முடித்தாய்
ஏற்றம் எமக்களித்தாய்
மண்ணிலே நாம் சிறப்புறவே
மாண்பான பண்பு தந்தாய்
விண்ணிலே வாழ்வமைக்க
விரைந்து நீ சென்றதேனோ ?

## மருமக்கள் புலம்பல்

காட்டிய அன்பிலே
கரைந்திட்ட நாமும்
'மாமி' என்ற சொல்
மருந்திற்கும் ஆகாதென
மனதில் நாளுமே
'அன்னை' என
அழைத்திருந்தோம் !
ஆயினும் பறந்துவிட்டீர்
அவசரமாய் எமைப்பிரிந்து.

## பேரர் புலம்பல்

நாம்,
கனடாவில் வாழ்வதனால்
கடிதம் மூலம் கதைத்திருந்தோம்
கனிவான உம் முகத்தை
காண்பதற்காய் வர விருந்தோம்
அதற்குள் அவசரமாய்
தாத்தாவிடம் சென்றதேனோ ?
தவிக்கிறதே எம் உள்ளம்
துயர்,
தணிந்திட முடியாமல்,

## சகோதரர் புலம்பல்

நாளெல்லாம் பார்த்திருந்து
நல்ல மொழி நாம் கேட்டே
வாழ்ந்திருந்த காலமெலாம்
கனவாகிப் போனதுவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உறவினர் புலம்பல்

அன்பை அள்ளி வீசி
பண்போடு பல காலம் பழகி
எம் இதயம் நிறைந்திட்ட
பெரியக்காவே!
இவ்வுலகு விட்டு நீரும்
ஈசனுலகு அடைந்தீர்
என்ற வாசகம் கேட்டு
வாடிநிற்கும் நாம்
கண்ணீர்ப் பூக்களை
உமக்கு
காணிக்கை ஆக்குகின்றோம்.

## தேற்றம்

சாதலும் பிறத்தலும் தவிர்க்கலாமோ
வேதனை கொண்டு வீணே நிற்கலாமோ
இன்பமுந் துன்பமும் உலகில் உண்மை
அன்புடன் வாழ்வதே அறமே யாகும்
என்ற பண்புடை வார்த்தை தன் பயனைக் கண்டு
அன்புடன் மகேஸ்வரி இறைவனடி சேர்ந்தார்
நன்றுடன் சேர்ந்தவள் வாழி வாழி
ஓம் சாந்தி சாந்தி சாந்தி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# திருமுறைப் பாடல்கள்

## விநாயகர் வணக்கம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணி விப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## தேவாரம்

குனித்த புருவமும் கொவ்வைச்
செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல்
மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற்
பாதமும் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே
யிந்த மாநிலத்தே.

## திருவாசகம்

மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத் தமுதே
ஊறிநின் றென்னுள் எழுபரஞ் சோதி
உள்ளவா காணவந் தருளாய்
தேறலின் தெளிவே சிவபெருமானே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த
இன்பமே என்னுடை யன்பே

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார் பெறுவா ருலகில்
ஊரும் உலகுங் கழற உழறி உமைமண வாளனுக் காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம் பல்லாண்டு கூறுமே.

## திருப்புராணம்

தெண்ணிலா மலர்ந்த வேணியாய் உன்றன்
திருநடம் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு
வாலிதாம் இன்பமாம் என்று
கண்ணில் ஆனந்த அருவிநீர் சொரியக்
கைம்மலர் உச்சிமேற் குவித்துப்
பண்ணினால் நீடி அறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்.

## திருப்புகழ்

பிறவியலை யாற்றினிற் புகுதாதே
பிரகிருதி மார்க்கமுற் றலையாதே
உறுதிகுரு வாக்கியப் பொருளாலே
உனதுபத காட்சியைத் தருவாயே
அறுசமய சாத்திரப் பொருளோனே
அறிவுளறி வார்க்குணக் கடலோனே
குறுமுனிவ னேத்துமுத் தமிழோனே
குமரகுரு கார்த்திகைப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சகலகலாவல்லி மாலை

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
    தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
    லோசக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான் பித்
    தாகவுண் டாகும் வண்ணங்
கண்டான் சுவைகொள் கரும்பே
    சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
    தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
    வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
    கனதனக் குன்று மைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
    சகல கலாவல்லியே

அளிக்குஞ் செந்தமிழ்த் தெள்ளமு
    தார்ந்துன் னருட் கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
    லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
    கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
    சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவற் றுறை தோய்ந்த
    கல்வியும் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
    வாய்வட நூற்கடலும்
தேக்கும் செந்தமிழ்ச் செல்வமுந்
    தொண்டர் செந்நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
    சகலகலா வல்லியே.

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
    பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
    னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன் செந்
    நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
    சகல கலாவல்லியே.

பண்ணும் பரதமுங் கல்வியுந்
    தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
    காயெழு தாமரையும்
விண்ணும் புவியும் புனலுங்
    கனலும் வெங் காலு மன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
    சகல கலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளாற்
    பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
    காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத் தமிழ்த் தீம்பா
    லமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப்பேடே
    சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்விற்பனமு மவதான
முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
வாய் நளி னாசனஞ் சேர்
செல்விக் கரிதன் றொருகால
முஞ்சிதை யாமை நல்குங்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே
சகல கலாவல்லியே.

சொற்கும் பொருட்கு முயிராம்மெய்ஞ்
ஞானத்தின் றோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்
நிலந்தோய் புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாண நடை
கற்கும் பதாம் புயத்தாளே
சகல கலாவல்லியே.

மண் கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன் னரு மென்
பண்கண்ட ளவிற் பணியச் செய்வாய்
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்டேனும்
விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வமுளதோ
சகல கலாவல்லியே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி விவேகானந்தரின் கருத்துக்கள்

- கருணையே இல்லாமல் அறிவு மட்டும் நிறைய இருப்பதைவிட - அறிவே இல்லாமல் கருணை சிறிதளவு இருப்பது நல்லது.

- நெஞ்சில் ஈரமுள்ளவனுக்குத்தான் வாழ்க்கையில் முன்னேற்றம் அமைகிறது.

- எல்லாவற்றிலும் பரம் பொருளைக் காணுங்கள் குழந்தை, மனைவி கணவன் எல்லாமாக இருப்பது அதுவே நல்லவராகவும் தீயவரா கவும் வாழ்விலும் சாவிலும் இருப்பது அதுவே.

- சுவர்களுக்கு ஆசை கிடையாது - ஆகவே அது துன்பம் அடைவ தில்லை. ஆனால் அது வளர்சியும் அடைவதில்லை.

- நமக்கு வேண்டியதையும் அதற்கு மேலேயும் வைத்துக் கொள்ள லாம். ஆனால் எல்லாம் பரம பொருளுக்கே சொந்தம் எனும் உண் மையை உணர வேண்டும்.

- மற்றவர்களுக்கு தீமை செய்து வாழ்பவன் - சிறியவன் மற்றவர் களுக்கு தீமை செய்யாமல் வாழ்பவன் - மனிதன். மற்றவர்களுக்கு நன்மை செய்து வாழ்பவன் - பெரியவன்.

- துன்பத்தால் நமக்கு கிடைக்கும் அனுபவம் நம் எல்லோருக்கும் தெரியும். நம் வாழ்வில் நாம் செய்யாமல் இருந்திருக்கலாமே என்று நாம பின்னால் வருத்தப்படும் பல நூறு காரியங்களை செய்து விட்டு, அதனால் உயர்ந்த அனுபவ பாடங்களைப் படிக்கின்றோம.

- முதலில் ஆத்துமாவை பற்றி கேள்விப்படுங்கள் பின் அதைப்பற்றி சிந்தியுங்கள், பிறகு அதைத் தியானம் செய்யுங்கள்.

- நம இலட்சியம் உயர்ந்ததாக இருக்கவேனும துரதிஸ்ரவசமாக நம்மில பலர் எந்தவொரு இலட்சியமும் இன்றி வாழ்ந்து முடிக் கிறார்கள்.

- இலட்சியத்துடன் வாழும் மனிதன் 1000 தவறுகள் செய்தால் இலட்சியமே இல்லாது வாழ்பவன் இலட்சம் தவறுகள் விடுவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நன்றி நவிலல்

அணையாத தீபமாய் மறையாத ரூபமாய் எம் இதயத்தே
இனிதே வாழ்ந்திருக்கும் எமதரிய தாயார் மலர்ந்த வாழ்
வமைத்து மகேஸ்வரன் மலரடி சேர்ந்திட்ட நாளில்
இறுதிச் சடங்கில் இணைந்தும் மற்றும் பல
வகையில் நாடியோடி வந்து உதவியுடன்
ஒத்தாசை எண்ணிலாது புரிந்தெமை
பெருமைப்படுத்திய உற்றார்
உறவினர், நண்பர்கள், அயலவர்களுக்கும் இன்றைய நிகழ்ச்சி
யில் இணைந்து சிறப்பித்த இனியோர் யாவருக்கும்
எமது இதயம் கனிந்த நன்றி.

இங்ஙனம்

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கல்லூரி வீதி.
காங்கேசன்துறை.

தற்காலிக முகவரி:-
இல 106 ஆடியபாதம் வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

பராசக்தி அச்சகம் கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org